அனுப்புநர்

நா.ராமராஜ்,
வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மேட்டுப்பாளையம்.

பெறுநர்

மக்கள் தொடர்பு அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கோயம்புத்தூர்.

ந.க.2626/2025/ஆ2, நாள்: .07.2025.

அய்யா,

பொருள்: பணி நியமனம் - கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலகு- மேட்டுப்பாளையம் வட்டம் - காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களில் பணிநியமனம் மேற்கொள்ள - வேலை வாய்ப்பகம் மற்றும் பத்திரிக்கை விளம்பரம் மூலம் விண்ணப்பங்கள் பெறுவதற்காக நாளிதழில் அறிவிக்கை செய்திட நடவடிக்கை மேற்கொள்ள கோருதல் - தொடர்பாக.

பார்வை: மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க: CLRREV/8126/2025/அ5 நாள்:01.07.2025

*****

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டத்தில் சிக்காரம்பாளையம், சிறுமுகை தோலம்பாளையம், சின்னகள்ளிப்பட்டி, வெள்ளியங்காடு ஆகிய ஐந்து கிராமங்களில் கிராம உதவியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. மேற்படி பணியிடங்களுக்கு மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலமாக பட்டியல் பெற்றும் மற்றும் பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்து அதன் மூலம் வரும் விண்ணப்பங்களை பெற்று நேர்முக தேர்வு நடத்தி பணிநியமனம் செய்திட பார்வை 1-ல் காணும் மாவட்ட ஆட்சியர் கடிதத்தில் உத்தரவிடப்பட்டுள்ளது .எனவே மேற்படி பணிநியமனம் செய்வது தொடர்பான வேலைவாய்ப்பு அறிவிக்கையினை 2 நாளிதழ்களில் 16.07.2025 அன்று வெளியிட ஆவண செய்யுமாறும், மேற்படி விளம்பரம் செய்வதற்கான செலவுத்தொகையினை செலுத்தி விடுகிறேன் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள

நா. [signature] 15.07.2025
வட்டாட்சியர்
மேட்டுபபாளையம்

நஅகு [signature]
15/07/2025

நகல்: கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
வட்டாட்சியர் அலுவலகம், மேட்டுப்பாளையம் வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

அறிவிக்கை எண்.01/2025 நாள். 16.07.2025

கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலகில், மேட்டுப்பாளையம் வட்டத்தில் காலியாக உள்ள 05 கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இடஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள். | 17.07.2025 முதல் |
| விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள். | 18.08.2025 மாலை 5.45 மணி வரை |
| பதவியின் பெயர் : | கிராம உதவியாளர். |
| ஊதிய விகிதம் : | சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.11,100 – 35,100/- |
| வட்டத்தின் பெயர்: | மேட்டுப்பாளையம் |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | 05 |

| நிரப்பப்படவுள்ள கிராமங்களின் விவரம். | வ.எண் | கிராமம் |
|---|---|---|
| | 1. | 05.தோலம்பாளையம் |
| | 2. | 06.வெள்ளியங்காடு |
| | 3. | 11.சிறுமுகை |
| | 4. | 13.சின்னகள்ளிப்பட்டி |
| | 5. | 19.சிக்காரம்பாளையம் |

| இனசுழற்சி விபரம் | வ. எண். | சுழற்சி எண் | இன சுழற்சி | பொது/ பெண் | முன்னுரிமை |
|---|---|---|---|---|---|
| | 1. | 11 | பொதுப்போட்டி (General Turn) | பொது (General) | முன்னுரிமை அற்றவர் (Non Priority) தமிழ்வழிக்கல்வி (PSTM) |
| | 2. | 12 | அட்டவணை வகுப்பினர் (Scheduled Caste) | பெண் (Women) | முன்னுரிமை அற்றவர் (Non Priority) ஆதரவற்ற விதவை (Destitute Widow) |
| | 3. | 13 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் (Most Backward Class and Denotified Communities) | பொது (General) | முன்னுரிமை அற்றவர் (Non Priority) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 4. | 14 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) (BC - other than Backward Class Muslim) | பொது (General) | முன்னுரிமை அற்றவர் (Non Priority) தமிழ்வழிக்கல்வி (PSTM) |
| | 5. | 15 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள்) (BC- Backward Class – Muslim) | பொது (General) | முன்னுரிமை பெற்றவர் (Priority)<br><br>போரில் உயிர்நீத்த அல்லது ஊனமடைந்தவர்களின் குடும்ப உறுப்பினர்<br><br>(Priority Member of the family who were killed or disabled in war) |

| | |
|---|---|
| கல்வித் தகுதி | 1. 10–ஆம் வகுப்பில் தேர்ச்சி அடைந்தவர்களும், தோல்வி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். தமிழ் மொழியை கட்டாய பாடமாக கொண்டு 10ஆம் வகுப்பு தேர்வு எழுதியிருக்க வேண்டும்.<br>2. 10 – ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் (தேர்ச்சி/தோல்வி) வைத்திருக்க வேண்டும்.<br>3. மேலும், தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| இதர தகுதிகள் | 1. விண்ணப்பதாரர் மேட்டுப்பாளையம் வட்டத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும்.<br>2. தேர்வு செய்யப்படுபவரின் நடத்தை குறித்தும் முந்தைய குற்றப் பின்னணி குறித்தும் நியமன அலுவலர் அறிந்து திருப்தி அடைய வேண்டும்.<br>3. அடிப்படை விதி 10 இன் படி உடற்தகுதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| வயது வரம்பு | குறைந்தபட்ச வயது | 21 வயது (அனைத்து பிரிவினருக்கும்) (01.07.2025 அன்று 21 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.) |
| | அதிகபட்ச வயது | 32 வயது (பொதுபிரிவினர்)<br>37 வயது – பிற்படுத்தப்பட்டோர் / பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பட்டியல் வகுப்பினர், பட்டியல் வகுப்பினர்(அருந்ததியர்) / பழங்குடியினர். |
| | மாற்றுத் திறனாளிகளுக்கு | அதிகபட்ச வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக தளர்வு வழங்கப்படும். |
| | முன்னாள் இராணுவத்தினருக்கு | 50 வயது – பொதுபிரிவினர்<br>55 வயது – பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பட்டியல் வகுப்பினர், பட்டியல் வகுப்பினர்(அருந்ததியர்) / பழங்குடியினர்.<br>(அரசாணை (நிலை) எண். 91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள். 13.09.2021–இன்படி வயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது) |

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் முறை | கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை கோயம்புத்தூர் மாவட்டத்தின் அதிகாரப்பூர்வமான இணையதளமான https://coimbatore.nic.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களுடன் மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும். காலம் கடந்து வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது |
| குறிப்பு | 1. கூடுதல் விபரங்களுக்கு https://coimbatore.nic.in இணையதளத்தில் பார்க்கவும்<br>2. தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மிதிவண்டி / இருசக்கர வாகனம் ஓட்டும் திறன்/ வாசித்தல்/ எழுதுதல், திறனறித்தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றிற்கு தனித்தனியே கடிதம் அனுப்பி வைக்கப்படும். |

**வட்டாட்சியர் அலுவலக முகவரி**

வட்டாட்சியர் அலுவலகம்,
சிறுமுகை ரோடு,
மேட்டுப்பாளையம் – 641301.

வருவாய் வட்டாட்சியர்,
மேட்டுப்பாளையம்.